[1992 மே 5

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

"பேரவையின் 25 (1)-வது விதியின்படி பேரவையை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடாமல் ஒத்திவைக்கலாம்." என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவரவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. வணக்கம்.

பின்னர் பிற்பகல் 2-15 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் பேரவை ஒத்திவைக்கப்பெற்றது.

9. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

84. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் 1988–89 ஆம் ஆண்டிற்கான பதினைந்தாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

ஏதுமில்லை